மேல்நிலை முதலாம் ஆண்டு

# உள்நிலைத்தேர்வு -- கணக்குப்பதிவியல்

நேரம் : 40 நிமிடம் | தேர்வு எண் --1 | மதிப்பெண்: 25

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 1 = 5$

### சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. கணக்கியலின் முக்கிய நோக்கங்கள் -----------
   அ) கணக்கேடுகளை பராமரித்தல் ஆ) நிதி நிலையை அறிதல் இ) இரண்டும்
2. ------------ நடவடிக்கைகள் மட்டுமே, வணிக நடவடிக்கைகளில் பதியப்படும்.
   அ) நிதி சார்புடைய ஆ) அறிவியல் சார்புடைய இ) இரண்டும்
3. நடப்பு ஆண்டின் ஆரம்பத்தில் பதியக்கூடிய பதிவு ---------
   அ) தோற்றப் பதிவு ஆ) இறுதிப் பதிவு இ) தொடக்கப்பதிவு
4. சொத்துக்களிலிருந்து பொறுப்புகளை கழித்தால் கிடைப்பது ---------------.
   அ) எடுப்பு ஆ) முதல் இ) வரவு
5. தனித்தன்மை அனுமானது நிறுவனத்தை இவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் ------------
   அ) உரிமையாளர் ஆ) வங்கியர் இ) அரசு

## II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 2 = 4$

6. கணக்கு ஏடுகள் பராமரிப்பு - இலக்கணம் தருக.
7. கீழ்க்கண்ட குறிப்பேட்டுப் பதிவுகளுக்குரிய நடவடிக்கைகளைத் தருக.
   அ. ரொக்கக் க/கு ப அறைகலன் க/கு
   ஆ. வாடகை க/கு ப ரொக்கக் க/கு
8. பின் வரும் நடவடிக்கைகள் எந்த துணை ஏடுகளில் பதிவு செய்யப்படும்?
   (அ) அமலாவிற்கு சரக்கு விற்றது (ஆ) விமலா நமக்கு சரக்கு

## III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 3 = 6$

9. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினைத் தருக.
   இயந்திரம் ₹.25,000 ; ரொக்கம் ₹.12,200 ; கடனீந்தோர்கள் ₹. 42,000 ; கடனாளிகள் ₹. 18,000
10. கணக்கியலின் பொன்னான விதிகள் யாவை?
11. . கணக்கியல் சமன்பாட்டின்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 22,000 | = | ? | + | 3,000 |
| (ஆ) | ? | = | 27,000 | + | 44,000 |
| (இ) | 42,000 | = | 44,000 | + | ? |

## IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 5 = 10$

12. திரு. கோவிந்தன் அவர்களின் ஏடுகளில் கீழ்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2013 | | ₹. |
|---|---|---|
| மார்ச் | 1. திரு. கோவிந்தன் தொழில் தொடங்கியது | 42,000 |
| | 3. காசோலை கொடுத்து சரக்கு வாங்கியது | 10,000 |
| | 5. ரொக்க கொள்முதல் செய்தது | 7,000 |
| | 12. மணிக்கு சரக்கு விற்றது | 13,000 |
| | 30. வாடகை செலுத்தியது | 7,000 |

13. நேரடியாக பேரேட்டினை தாயாரிக்கவும்.

| 2015 | | ₹. |
|---|---|---|
| நவ | 1. திரு. கந்தன் தொழில் தொடங்கியது | 55,000 |
| | 7. ரொக்க விற்பனை | 11,000 |
| | 5. ரொக்க கொள்முதல் செய்தது | 7,000 |
| | 30. வாடகை செலுத்தியது | 5,000 |

14. பின்வரும் இனங்களை ஆள்சார் கணக்கு, சொத்துக் கணக்கு, பெயரளவுக் கணக்கு என வகைப்படுத்துக.
    1. முதல் 2. கழிவு பெற்றது 3. விற்பனை 4. கட்டிடம் 5. எடுப்பு 6. வங்கி
    7. கொடுபட வேண்டிய சம்பளம் 8. லதா 9. விளம்பரம் 10. கவி வாடகை நூலகம்

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

மேல்நிலை முதலாம் ஆண்டு

# உள்நிலைத்தேர்வு -- கணக்குப்பதிவியல்

நேரம் : 40 நிமிடம் | தேர்வு எண் -- 2 | மதிப்பெண்: 25

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 1 = 5$

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. பாகுபடுத்தப்பட்ட சிலறை ரொக்க ஏடு ------------- போன்றது.
   அ) ரொக்க ஏடு ஆ) குறிப்பேடு இ) பேரெடு
2. வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட காசோலை அவமதிக்கப் பட்டால், அவருடைய கணக்கில் -------- செய்யப்பபடும்.
   அ) வரவு ஆ) பற்று இ) பற்று மற்றும் வரவு
3. ரொக்க ஏட்டின்படி இருப்பு, ஆரம்ப நிலையாக இருக்கும் பொது, வங்கியில் நேரடியாக செலுத்துபவை -------
   அ) கூட்ட வேண்டும் ஆ) கழிக்க வேண்டும் இ) இரண்டும் இல்லை.
4. மேலாளருக்குச் செலுத்தப்பட்ட ஊதியம் பற்று வைக்க வேண்டியது ------
   அ) மேலாளர் கணக்கில் ஆ) அலுவலக செலவு கணக்கில் இ) ஊதிய கணக்கில்
5. ஒரு தொழிலின் சொத்துக்களின் மதிப்பு ₹. 50,000 அதன் உரிமையாளரின் முதல் ₹. 17,000 எனில் பொறுப்புகளின் மதிப்பு -------
   அ) ₹. 13 ,000 ஆ) ₹. 23,000 இ) ₹. 33,000

## II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 2 = 4$

6. நாளேடுகளின் வகைகள் யாவை?
7. பின்வரும் பிழைகளைத் திருத்துக:
   (அ) கொள்முதல் கணக்கில் குறைவானப் பற்று. (ஆ) விற்பனைக் கணக்கில் குறை வரவு
8. தனிப்பத்தி ரொக்க ஏட்டின் மாதிரிப் படிவம் தருக.

## III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 3 = 6$

9. கீழ்க்காணும் நடவடிக்கைகளை தகுந்த துணையேடுகளில் பதிக.

| | | | |
|---|---|---|---|
| 2016 ஜூன் | 1 | ராமனிடம் கொள்முதல் செய்தது | ₹. 5,000 |
| | 7 | சங்கருக்கு விற்பனை செய்தது | ₹. 3,200 |
| | 20 | குமாருக்கு சரக்கு விற்றது | ₹. 4,000 |

10. பின் வரும் கணக்குகளின் இருப்புகளை எழுதுக
    (அ) கடனீந்தோர் (ஆ) கடனாளிகள் இ) கொள்முதல்
11. பின்வருவன முதலினத்தைச் சார்ந்ததா, வருவாய் இனத்தைச் சார்ந்ததா என குறிப்பிடுக:
    (அ) காப்புரிமை பெற செலவு செய்தது ஆ) உள்தூக்கு கூலி கொடுத்தது இ) விளம்பரச் செலவு

## IV. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 5 = 10$

12. பாகுபடுத்தப்பட்ட சில்லறை ரொக்க ஏட்டில் கீழ்க்காணும் நடவடிக்கைகளைப் பதிவிடுக.

| 2010 ஜூன் | | ₹ |
|---|---|---|
| 1. | கை ரொக்கம் | 240 |
| | காசாளரிடமிருந்து பெற்றது | 760 |
| 4. | அஞ்சல் தலைகள் வாங்கியது | 120 |
| 5. | பயணச் செலவுகள் | 100 |
| 6. | சாப்பாட்டுச் செலவு | 150 |
| 10. | எந்திரம் பழுது பார்த்தது | 250 |
| 15. | அலுவலகம் சுத்தம் செய்தது | 110 |
| 17. | எழுதுபொருள் வாங்கியது | 175 |
| 27. | தேநீர் வாங்க செலவு செய்தது | 150 |

13. திரு. முத்து அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2016 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

    1) முதல் ₹. 38 ,000 2.) சம்பளம் ₹. 28,000 3) பெற்ற கழிவு ₹. 14,800 4) வங்கி கடன் ₹.4,300
    5) அளித்த தள்ளுபடி ₹. 7,100 6) வங்கி ரொக்கம் ₹. 12,000 7) பற்பலகடனீந்தோர் ₹. 8,000
    8) அறைகலன் ₹. 7,000 9) பயணச்செலவுகள் ₹.2,000 10) வாடகை ₹. 9,000

14. குறிப்பேட்டிற்கும், பேரேட்டிற்கும் உள்ள வேறுபட்டில் ஏதேனும் ஐந்தினை குறிபிடுக.

http://www.trbtnpsc.com/2017/06/latest-11th-study-materials-tamil-medium-english-medium.html

மேல்நிலை முதலாம் ஆண்டு

# உள்நிலைத்தேர்வு – கணக்குப்பதிவியல்

நேரம் : 40 நிமிடம் | தேர்வு எண் – 3 | மதிப்பெண்: 25

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $5 \times 1 = 5$

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. கணக்கியல் சமன்பாடு எதனுடன் சார்ந்தது?

அ) சொத்துகளுடன் ஆ) பொறுப்புகளுடன் இ) சொத்துகள், பொறுப்புகள் மற்றும் முதல் ஆகியவற்றுடன்

2. ஒரு தொழிலின் பொறுப்புகளின் மதிப்பு ₹.3,500 அதன் உரிமையாளரின் முதல் ₹. 7,200 எனில் சொத்துக்களின் மதிப்பு --------

அ) ₹. 10,200 ஆ) ₹. 10,500 இ) ₹. 10,700

3. பற்று மொத்தமும் வரவு மொத்தமும் சமமாக இருந்தால், அது --------

அ) பற்றிருப்பு ஆ) வரவிருப்பு இ) இருப்பு இன்மை

4. பேரேடு ஒரு -------------

அ) தோற்றப் பதிவு ஏடு ஆ) இறுதிப் பதிவு ஏடு இ) ரொக்க நடவடிக்கைகள் ஏடு

5. கடன் விற்பனை பதிவு செய்யப்படுவது ---------

அ) விற்பனை ஏடு ஆ) ரொக்க ஏடு இ) முறையான குறிப்பேடு

## II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 2 = 4$

6. வங்கி சரிகட்டும் பட்டியலைத் தயாரிப்பவர் யார்? அதன் தேவைகளில் ஒன்றினை எழுதுக.
7. சலுகை நாட்கள் என்றால் என்ன?.
8. ஆகஸ்ட் 4, 2017 -ல் ரமேஷ் போட்ட முதல் ₹. 15,000 ; ராஜா போட்ட முதல் ₹. 7,200. குறிப்பேட்டுப் பதிவு தருக.

www.Padasalai.Net

## III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 3 = 6$

9. மூவகைக் கணக்குகளில் பற்று மற்றும் வரவு இருப்புகளில் எவற்றை உணர்த்துகின்றன?
10. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினைத் தருக.

இயந்திரம் ₹.25,000 ; ரொக்கம் ₹.12,200 ; கடனீந்தோர்கள் ₹. 42,000 ; கடனாளிகள் ₹. 18,000

11. வங்கி சரிக்கட்டும் பட்டியலைத் தயார் செய்க :

1) ரொக்க ஏட்டின் படி இருப்பு ₹.21,000 2) வங்கியில் செலுத்தியும் வசூலாகாதது ₹.1,000
3) வங்கி அளித்த வட்டி ₹.500

## IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 5 = 10$

12. கீழ்கண்ட நடவடிக்கைகளைக் கொண்டு திருமதி. கீதாவின் தனிப்பத்தி ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| 2013 | | | ₹. |
|---|---|---|---|
| மார்ச் | 1. | கைரொக்கம் | 46,000 |
| | 3. | வங்கியில் செலுத்தியது | 14,000 |
| | 5. | பங்காதாயம் பெற்றது | 7,000 |
| | 11. | காசோலை பெற்றது | 2,000 |
| | 15. | கூலி செலுத்தியது | 500 |

13. பின்வரும் நடவடிக்கைகளை உரிய துணை ஏடுகளில் பதிவு செய்க ;

| 2013 | | | ₹. |
|---|---|---|---|
| ஏப்ரல் | 1 | ரமேஷ்க்கு சரக்கு விற்றது | 15,000 |
| | 5 | குமாருக்கு சரக்கு விற்றது | 12,200 |
| | 8 | சங்கருக்குச் சரக்கு விற்றது | 3000 |
| | 10 | குமார் திருப்பிய சரக்கு | 6,100 |
| | 15 | ரமேஷ் திருப்பிய சரக்கு | 2,000 |
| | 23 | சங்கரிடமிருந்து சரக்கு வாங்கியது | 10,000 |

மேல்நிலை முதலாம் ஆண்டு

# உள்நிலைத்தேர்வு -- கணக்குப்பதிவியல்

நேரம் : 40 நிமிடம் தேர்வு எண் -- 4 மதிப்பெண்: 25

## I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. பொருளை உற்பத்தி செய்ய அல்லது பண்டங்கள், பணியினை விற்பனை செய்யும் நிலைக்கு கொண்டுவர ஆகும் தொகை ----------
   அ. செலவுகள் ஆ. வருவாய் இ. ஆதாயம்
2. சொத்துக்களிலிருந்து பொறுப்புகளை கழித்தது --------
   அ. எடுப்பு ஆ. முதல் இ. வரவு
3. தனித்தன்மை அனுமானமானது நிறுவனத்தை இவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும்.
   அ. உரிமையாளர் ஆ. வங்கியர் இ. அரசு
4. இரட்டைத் தன்மைக் கருத்துப்படி ஒவ்வொரு வணிக நடவடிக்கையும் --------
   அ. மூன்று தன்மைகளைக் கொண்டுள்ளது ஆ. ஒரு தன்மையுடையது இ. இருதன்மையுடையது
5. முதல் கணக்கு இடம்பெறும் வகை -------
   அ. ஆள்சார் கணக்கு ஆ. சொத்துக் கணக்கு இ. இரண்டும் இல்லை

## II. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 × 2 = 4

6. தேவையெனக் கருதும் இடத்தில் சரியான பதிவுகளைத் தருக.

   அ) தொழிலில் முதல் இட்டது.
   முதல் க/கு ப
   ரொக்கக் க/கு

   ஆ) ரொக்கக் கொள்முதல்
   ரொக்கக் க/கு ப
   கொள்முதல் க/கு

7. கணக்கியல் சமன்பாட்டின்ப்பாட்டில் விடுபட்ட தொகையினைக் கண்டுபிடி.

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 28,000 | = | ? | + | 13,000 |
| (ஆ) | ? | = | 7,000 | + | 4,000 |

8. சான்றுச் சீட்டு - சிறு குறிப்பு வரைக.

www.Padasalai.Net

## III. எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 × 3 = 6

9. பின்வரும் விவரங்களைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க.

   முதல் ₹. 20,000 ; எடுப்பு ₹. 5,000 ; பற்பல கடனீந்தோர் ₹. 2,500 ; எந்திரம் ₹. 17,500

10. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு முன்பணமீட்பு முறையில் சில்லறை ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| 2003 | | | ₹. |
|---|---|---|---|
| மே | 1 | ரொக்கம் இருப்பு | 2,900 |
| | 2 | வாடகை | 450 |
| | 3 | அஞ்சல் தலைகள் வாங்கியது | 115 |
| | 5 | ஆட்டோ செலவு | 250 |

11. எதிர்ப் பதிவு என்றால் என்ன?.

## IV. அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 × 5 = 10

12. கீழ்க்காணும் பிழைகளைத் திருத்துக..
    i) கொள்முதல் ஏடு ₹.1,000 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
    ii) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 750 அதிகமாக தூக்கி எழுதப்பட்டது.
    iii) காமினிக்கு விற்பனை செய்தது ₹.430 , அவர் கணக்கில் ₹. 340 என எடுத்தெழுதப்பட்டது.
    iv) விற்பனைத் திருப்ப ஏடு ₹. 800 குறைவாக கூட்டப்பட்டது.
    v) ராஜனிடம் கடனாக வாங்கியது ₹. 5,500 , அவர் கணக்கில் தவராக பற்று வைக்கப் பட்டுள்ளது.
13. கீழ்காண்பவை முதலினத்தைச் சார்ந்ததா அல்லது வருவாயினத்தைச் சார்ந்ததா எனக்குறிபிடுக.
    1. இயந்திரத்தின் ஒரு பகுதியை மாற்றச் செல்விட்டது ₹. 600
    2. மின்கட்டணம் செலுத்தியது ₹. 7,000
    3. மேலாளரின் ஊதியம் ₹. 60,000
    4) லாரிக்கு டயர் வாங்கியது ₹. 39,000
    5) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காகச் செலவு செய்தது ₹. 2,50,000